Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 68 அப்பொழுது பூமி அசைந்து அதிர்ந்தது, அவர் கோபங்கொண்டபடியால் ... அசைந்தது. சங். 18:7 டிசம்பர் 2022 No.12

எல்லாமே ஜெபத்தினால்

Every thing by Prayer

Armin Gesswein (1907-2001)

இவ்வுலகில் மிகவும் மேன்மையானதும் பரிசுத்தமானதுமான பணி ஜெபமாகும். ஆனால் அதுதான் அதிகமாக உதாசீனப்படுத்தப்படுகிறது. மன்றாடுவதில் நாம் மிகவும் பின் தங்கியிருக்கிறோம்.

நாம் ஜெபத்தை ஊழியமாகவும், தேவ வசனத்தை அதற்கு ஆதாரமாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும். நமது சிந்தை, 'நாம் ஜெபிப்போம் பின்பு நமது வேலைகளைச் செய்வோம்' என்பது. ஆனால் ஜெபமே நமது உண்மையான வேலை. சுறுசுறுப்பான இவ்வுலகில் ஜெபம் முன்னால் அல்லது பின்னால் இணைக்கப்படும் ஒன்றாக இருக்கிறது. ஆனால் **நாம் ஜெபித்துக் கொண்டிருக்கும் போதுதான் தேவன் வேலை செய்கிறார் என்பதை அறியாமலிருக்கிறோம்.** ஜெபம் அனைவருக்கும் புரட்சியை ஏற்படுத்துகிறது. அதற்காக நாம் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்க வேண்டும்.

கிறிஸ்துவைப் போல நாம் அனேக மணி நேரங்கள் ஜெபிக்க வேண்டும். ஜெபத்தில் போராட வேண்டும், ஊக்கமாக ஜெபிப்பதால் கண்ணீரும், வேதனையும், வியர்வையும் வெளிப்பட வேண்டும். ஊழியத்தில் ஜெபத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அது மேலான பணி. எபி. 7:25ல் 'அவர் வேண்டுதல் செய்யும்படிக்கு எப்பொழுதும் உங்களோடிருக்கிறார்' என்று காண்கிறோம்.

தேவ பணிகளெல்லாம் ஜெபத்தின் மூலமாகவே செய்யப்படுகின்றன. அவர் சிங்காசனத்திலிருந்துகொண்டு வேண்டுதல் செய்கிறார். நமக்காவும் வேண்டுதல் செய்கிறார். அவர் ஆவியால் நமக்காக ஜெபிப்பதோடு நம்மிலிருந்தும் ஜெபிக்கிறார். அவரது ஜெபத்தையே நமக்குத் தருவதால் அது உண்மையான ஜெபம்.

அவருக்கு நேராக நாம் ஜெபத்தை ஆரம்பிக்க வேண்டியதில்லை. நாம் ஜெபத்தில் பிரவேசித்து அது நமக்குள் பிரவேசிக்க வேண்டும். அதனால்தான் அவரது பணியில் தேவனோடு உடன் ஊழியக்காரராகிறோம். 1 கொரி. 3:9. அவரது பணியைச் செய்வதைக் கற்றுக் கொள்வோம். அவரது அடிமைகளாக அல்ல அவருடைய குமாரராகப் பணி செய் வோம்.

நமது சிந்தை, 'நாம் ஜெபிப்போம் பின்பு நமது வேலைகளைச் செய்வோம்' என்பது. ஆனால் ஜெபமே நமது உண்மையான வேலை.

ஜெபித்து முடித்த பின்பு ஜெபத்தின் பதிலுக்காக ஆவலோடு காத்திருப்போம். மேற்கொண்ட ஜெப வீரரான அவர் நம்மையும், அவரது பின்னடியார்களையும் நடத்துவார். நாம் தேவனோடு பணி செய்யும் போது அவரது கிருபைகளைக் காண்போம். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. யாக். 5:16. தேவனுக்கு ஜெபம் என்பது எல்லாமல்ல, ஆனால் ஜெபத்தினால் எல்லாமே ஆகும்.

ஜெபம் தேவசித்தத்தை நிறைவேற்றும்

தேவன் ஒரு காரியத்தைச் செய்ய முற்படும்போது அவரது பிள்ளைகளை ஜெபிக்கச் செய்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்வோம். ஜெபத்திற்கு அப்பாற்பட்டது எதுவுமில்லை. ஆனால் தேவசித்தத்திற்கு அப்பாற்பட்டது மட்டுமே வெளியே நிற்கும்.

உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக லூக். 11:2

"நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ, அது உங்களுக்குச் செய்யப்படும்." யோ. 15:7.

"ஏனெனில் தேவனே தமது தய வுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்கு கிறவராயிருக்கிறார்." பிலி. 2:13.

வேதபுத்தகத்தில் தேவன் தமது சித்தத்தை ஜெபத்தில் வெளிப்படுத்து கிறார். அதை நிறைவேற்றவும் செய்கிறார்.

'ஆண்டவரே எங்களுக்கு ஜெபிக்கக் கற்றுத் தாரும்'

நாம் எவ்வளவு வளர்ச்சியடைந் திருக்கிறோம்? நமது முன்னேற்றமென்ன? நாம் என்ன நிலையிலிருக்கிறோம்? நமது முதிர்ச்சி எத்தகையது? அது ஜெப வாழ்வில்தான் வெளிப்படும். நமது உண்மையான சீஷத்துவம் ஜெபமாகிய பள்ளியில் தான் வளருகிறது. அங்குதான் நமது நடை முறைகள் உறுதிப்படுத்தப் படுகின்றன. நாம் ஜெபத்தில் உறுதியாயிராவிட்டால் நாம் கிறிஸ்துவோடில்லை. ஜெபம் நமக்கு ஜீவன். அதுவே நமது ஆவிக்குரிய வளர்ச்சியின் அளவுகோல். நமது வல்லமையின் நிலைப்பாடு. சாத்தான் நமது வல்லமையினை எதிர்க்க முடியாது.

இயேசுவின் மிகப்பெரிய இரகசியம் அவருடைய ஜெபம் என சீஷர்கள் கண்டு கொண்டனர். தனது சீஷர்களும் தம்மைப் போலவே ஜெபிக்க வேண்டுமென்ற ஆசை அவரிடமிருந்தது என்பதை அவர்கள் அறிந்தனர்.

அவர் பரத்துக்குச் சென்ற பின்பு அவரிடமிருந்து அவர்கள் எதைக் கற்றுக் கொள்ளாவிட்டாலும் ஜெபிக்கக் கற்றுக் கொண்டனர். அவருடைய இரகசியம் அவர்களுக்கும் சொந்தமாயிற்று. சீஷர்களை ஜெப பாடசாலையிலும் விசுவாச பாடசாலையிலும் தேர்ச்சியடையச் செய்து விட்டபடியால் அவர்களிடம் உள்ள நம்பிக்கை மூலம் பரத்துக்குச் செல்லலாம் என்ற எண்ணமும், அவர்கள் இனி அத்தியாயம் அத்தியாயமாகக் கடந்து செல்வார்கள் என்ற உறுதியும் ஏற்பட்டது.

ஜெபத்தினால் எல்லாம் சாத்தியமாகும்

வாழ்வு தொடர்ந்து அதிசயங்களால் நடத்தப்பட வேண்டும். எல்லாவற்றிலும் சரியாயிருக்கவும் முன்னேறிச் செல்லவும் ஜெபம் அவசியம்.

எல்லா மனுஷருக்காகவும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் ஏறெடுக்க வேண்டும். 1 தீமோ. 2:1. அப்பொழுது அவர் நமக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாயிருப்பார். சகல மகிமையும் அவருக்கே உண்டாகட்டும்.

அறிவிப்புகள்

நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு தடவையும் உங்கள் **பத்திரிகை பதிவு எண், தொலைபேசி எண்** இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.

கடிதம், காணிக்கை, கொரியர்அனுப்ப வேண்டிய முகவரி :

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil - 629 001.
Mobile : 9543221008

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

EL SHADDAI

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2022 டிசம்பர் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும் துதிக்கிறேன். அக்டோபர் மாதம் 20ம் தியதி இந்த ஆசிரியர் கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன்.

மிகவும் அதிர்ச்சியளிக்கக்கூடிய சில செய்திகளை கீழே அச்சிடுகிறேன்:

1. சென்னையில் ரயில் முன் தள்ளி கொலைச் செய்யப்பட்ட கல்லூரி மாணவி.
2. கேரளாவில் மிக கொடூரமாக நரபலி கொடுக்கப்பட்ட இரண்டு அப்பாவி பெண்கள்.
3. தமிழ்நாட்டில் மரித்துப் போன போதகர் ஒருவரின் அடக்கத்திற்காக தோண்டப்பட்ட குழி, மத வெறியர்களால் மூடப்பட்டு, உயர் அதிகாரிகள்வந்து திரும்பவும் தோண்டப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.
4. திருப்பூரில் பட்டா நிலத்தில் ஆராதனை நடந்து கொண்டிருக்கும் போதே மத விரோதிகள் உள்ளே புகுந்து பலவந்தமாக பரிசுத்த ஆராதனையை தடுத்து நிறுத்தியது, அதிகாரிகள் வந்து பாதுகாப்பு கொடுத்தது.
5. தேச அளவில் **மொழி** பிரச்சனை.
6. **ஜாதி** பிரச்சனை.
7. 2024-ம் ஆண்டு தேர்தலில் இதே ஆட்சி திரும்பவும் தேர்வானால் ஏற்படக்கூடிய **மத** பிரச்சனை.

7 மணி நேர உபவாச ஜெபங்களுக்காக நாம் மாதந்தோறும் அச்சிடும் பதிவு தாளின் ஒரு பகுதியை கீழே அச்சிடுகிறேன்:

நாம் தொலைக்காட்சியில் காணும் நிகழ்வுகள் செய்தி தாளில் வாசிக்கும் சம்பவங்கள் போன்றவை ஆத்துமாவை உறைய வைத்து சோர்ந்து போகச் செய்கின்றன. நம்மைச் சுற்றி நடக்கின்றவை குறித்து நான் அதிர்ச்சி அடையவில்லை; மாறாக இந்த சூழலுக்கு நாம் எப்படி பதிலடி கொடுக்க வேண்டுமென்று தான் தேவ மக்களைக் கேட்க விரும்புகிறேன்.

நம்மைச் சுற்றி நடக்கிறவற்றிற்காக கண்ணீர் விட்டுக் கதறாவிட்டால், நாம் கிறிஸ்துவின் சிந்தையுடையவர்களல்ல. இயேசுவானவர் எருசலேம் நகரத்திற்கு வரப்போகும் அழிவை பார்த்தபோது, அவர் நகரத்திற்காய் அழுதார். நம்மில் சிலர் ஜெபிப்பதின் மூலம் ஆண்டவரின் உள்ளத்தின் வேதனையை பகிர்ந்து கொள்வதால் நம் நாட்டின் மீது வரும் தேவனின் தண்டனை தள்ளி வைக்கப்படலாம்.

நாம் ஜெபிக்கவில்லையென நான் கூறவில்லை; மெய் தான், நாம் விண்ணப்பம் பண்ணுகிறோம்; ஆனால் நாம் நம் உள்ளத்தில் வேதனையோடு கெஞ்சுகிறோமா? என்பதே என் கேள்வி. கிறிஸ்து இல்லாமல் சாவை சந்திக்கும் இலட்சக்கணக்கான அழிந்து போகும் ஆத்துமாக்களைக் குறித்த பாரம் நமக் குண்டா?

ஆண்டவருடைய கிருபையினால் அக்டோபர் மாதம் 7-ம் தியதி மாலை புறப்பட்டு, கடந்த மாதம் போல் ரயில், கார் மூலம் 8-ம் தியதி சனிக்கிழமை சென்னை வில்லிவாக்கத்தில் உள்ள **Zion Prayer House** போய் சேர்ந்தோம். உபவாச ஜெபம் முடிந்த உடன் ரயில் ஏறி 9-ம் தியதி நாகர்கோவில் வந்து சேர்ந்தோம்.

போதகரின் சாட்சி

அந்த சபையைச் சார்ந்த மிகவும் வயதான ஒருவர், ஞாயிறு ஆராதனையில் 2 மணி நேரம் இருப்பதே சிரமம், இந்த நிலையில் 7 மணி நேரம் உபவாச ஜெபத்தில் இருப்பது எப்படி என்று கேள்வி எழுப்பியுள்ளார். நடந்தது என்ன? மற்றவர்கள் தங்களுக்குத் தேவைப்படும் போது வெளியே சென்றிருக்கிறார்கள்; ஆனால் இந்த வயதானவரோ 7 மணி நேரமும் அப்படியே அமர்ந்திருக்கிறார். உபவாச ஜெபத்தின் இறுதியில் ஆசீர்வாதம் கூறும்முன் சபை போதகர் **Pr. C. Romeo Charles** அவர்கள் சபையில் கூறினார்கள், தேவனுக்கே மகிமை.

"நீ ராஜாவின் அரமனையிலிருக்கிறதினால், மற்ற யூதர் தப்பக்கூடாதிருக்க, நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவு கொள்ளாதே.

நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால், யூதருக்குச் சகாயமும், இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும், அப்பொழுது நீயும் உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள், நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும் படி உனக்கு ராஜ மேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்" எஸ்தர் 4:13,14 என்று எச்சரிக்கப்பட்ட எஸ்தர் ராஜாத்தி கூறினது என்ன?

அப்பொழுது எஸ்தர்: நீர் போய் சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச் செய்து, மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம் பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம்; இவ்விதமாகச் சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; **நான் செத்தாலும் சாகிறேன்** என்று சொல்லச் சொன்னாள். எஸ்தர் 4:15,16

எழுப்புதலுக்காக இதய கதறல் 2023
Heart cry for Revival 2023

மாதம்	தேதி	இடம்
ஜனவரி	21.01.2023 3rd Saturday	Calvary A.G. Church, Surandai, Nellai
பெப்ரவரி		
மார்ச்	11.03.2023 2nd Saturday	St. Johns C.S.I மலைக்கோடி, வேலூர்
ஏப்ரல்		
மே		
ஜூன்		
ஜூலை		
ஆகஸ்ட்		
செப்டம்பர்		
அக்டோபர்		
நவம்பர்		
டிசம்பர்		

கர்த்தருக்குச் சித்தமானால் 2023-ம் ஆண்டு ஒரு மாதம் உங்கள் சபையை "**எழுப்புதலுக்காக இதய கதறல்**" 7 மணி நேர உபவாச ஜெபத்திற்கு திறந்து தாங்கள் என்று அதிக அன்பாய் கேட்கிறேன்.

மிகவும் நன்றி

2022-ம் ஆண்டு முழுவதும் தேவனுடைய பிள்ளைகள், தேவையான சந்தர்ப்பங்களில் அனுப்பிய அனைத்துக் காணிக்கைகளுக்காகவும் தேவனை துதிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் எங்கள் நன்றியை தெரிவிக்கிறேன்.

2023-ம் ஆண்டு பத்திரிக்கை அனுப்ப

1. எல்லா ஊழியங்களைப் போல **மாதந்தோறும்** வருகையின் தூதன் பத்திரிக்கை பணியை தாங்குங்கள்.
2. மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் **ரூபாய் 500** அனுப்புங்கள்.
3. கர்த்தர் உங்களை ஏவுகிறபடி சிறப்பு காணிக்கைகள் அனுப்புங்கள்.

(8-ம் பக்கம் பார்க்க)

ஜெபத்தின் வல்லமைக்கு ஆதாரம்

The Soure of Power in Prayer

Andrew Murray C. (1828 - 1917)

"அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார்; நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால் இருதயங்களைப் பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்". ரோமர் 8: 26,27

ஆவிக்குரிய வாழ்வில் இன்றியமையாதது ஜெபம். ஆயினும் எப்படி ஜெபிக்க வேண்டும், எதற்காக ஜெபிக்க வேண்டும் என்று நாம் அறியாதிருக்கிறோம். நமக்காக ஆவியானவர் வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு ஜெபிப்பதாகப் பவுல் ரோமருக்கு எழுதுகிறார்.

ஆவியானவர் என்ன செய்கிறார் என்பதையும் அறியாமலிருக்கிறோம். இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிற ஒரு தேவனிருக்கிறார். நமது வார்த்தைகள் நமது எண்ணங்களையும் விருப்பங்களையும் தெரிவிக்கலாம். ஆனால் இருதயத்தின் ஆழங்களில் மறைந்திருப்பவைகளை தேவன் ஒருவரே அறிவார். தேவனுக்காக நம்மில் காணப்படும் நமது அளவிட முடியாத வாஞ்சைகளைத் தேவன் காண்கிறார்.

நாம் சமயம் எடுத்து இரட்சிக்கப்படாத மக்களுக்காக தேவனுடைய பாரத்தை தேவன் நம்மில் தரும்படி ஜெபிக்காவிடில் அதை உணரமாட்டார்கள். ஜெபிக்கவில்லை என்ற உணர்வு ஏற்பட்டால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாக ஜெபிக்கிறவர்கள் சபையை ஆசீர்வதிக்கவும், எழுப்புதலடையச் செய்யவும், அதனை லௌகீகத்திலிருந்து வெளிக் கொணரவும் கூடும் என்பதை நாம் அறியாமலிருக்கிறோம்.

மறுபுறமாக தேவனிடத்தில் வந்து, 'ஆண்டவரே, எதைக் கேட்க வேண்டுமென்று அறியோம், எதைத் தர வேண்டுமென்று நீர் அறிவீர்' என்று தைரியமாகக் கேட்கிறோம். நாம் நமது ஜெபங்களில் எவ்வளவு நிர்விசாரமாகவும் இயலாதவர்களாகவும் இருக்கிறோம் என்பதை உணர்ந்தால் மட்டுமே தூய ஆவியானவர் நம்மிலிருந்து ஜெபிக்க முடியும். எனவே தேவனிடம் சென்று, 'ஆண்டவரே, நாங்கள் ஜெபிக்கக் கூடாதவர்கள்' ஜெபம் என்றால் என்ன என்று எங்களுக்குத் தெரியாது', என்று ஜெபிப்போம். நம்மில் சிலர் ஜெபம் என்றால் என்ன என்பதை ஒரு குறிப்பிட்ட அளவு அறிந்து அவர் ஜெபத்தைக் கேட்பதையும் உணர்ந்து அவருக்கு நன்றி செலுத்தவது உண்மைதான். அது ஆவியானவரின் போதனையில் ஒரு சிறு பகுதி மட்டும். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால் ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார். ரோமர் 8:26.

கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கமாக ஜெபிக்கிறவர்கள், சபையை ஆசீர்வதிக்கவும், எழுப்புதலடையச் செய்யவும், அதனை லௌகீகத்திலிருந்து வெளிக் கொணரவும் கூடும் என்பதை நாம் அறியாமலிருக்கிறோம்.

ஆராதனையும் ஐக்கியமும்

ஜெபத்தில் வித்தியாசமான அம்சங்களுண்டு. மகா பெரிய தேவனை நாம் ஆராதிப்பதால் மனிதன் கீழே விழுந்து, குனிந்து, பணிந்து அவரை ஆராதிக்க வேண்டும். நாம் அவரோடு முகத்துக்கு முகம் கிட்டிச் சேர்ந்து அவர் பிரசன்னம் நம்மைச் சூழ்ந்து கொள்ளவும், நம்மை அவர் தமது அன்பாலும் மகிமையாலும் மூடி நிரப்பவும் ஜெபிப்போமாக. நாம் அடிக்கடி அவரைச் சந்திக்கும்படி நமது ஆசை இச்சைகளை லௌகீகத்தை விட்டு விட தூய ஆவியானவர் மட்டுமே நமக்குள் வாஞ்சையைத் தரமுடியும்.

அடுத்தது ஐக்கியம். தேவனை அரசராக ஆராதிப்பது மட்டுமல்ல ஒரு குழந்தையைப் போல அவரிடம் வர வேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் இவ்வித ஐக்கியத்தில் குறைவுபட்டவர்கள். ஜெபம் என்பது சில விண்ணப்பங்களை ஏறெடுப்பது மட்டுமே என்று எண்ணுகிறோம்.

நான் எப்படியிருக்க வேண்டுமென்று கிறிஸ்து விரும்புகிறாரோ அப்படி ஆக நான் அவரோடு தனித்திருக்க வேண்டும். அவரது அன்பு என்னில் பிரவேசித்து என் இருதயத்தில் அது பற்றியெரிய வேண்டும். அதற்கு நான் அதிக நேரம் அவரோடு செலவிட வேண்டும்.

கொல்லன் இரும்புக் குறட்டை நெருப்பில் இடுகிறான். சிறிது நேரம் மட்டும் அது இடப்பட்டால் அது சிவக்காது. ஒரு நாளில் பல தடவை இவ்வாறு கொஞ்சம் கொஞ்சம் நேரம் நெருப்பிலிருப்பதால் அது பணிக்கு பயன்படக் கூடிய செம்பழுப்பு நிறமாகாது. அதிக சமயமெடுத்து அக்கினியில் போடும் போதுதான் அது பயன்படும் வெப்ப நிலை அடையும். அப்படியே தேவனுடைய அக்கினியாகிய அவருடைய தூய்மை, அன்பு, வலிமை ஆகியவற்றைப் பெற அவரோடுள்ள உறவில் அதிக நேரம் கொடுக்க வேண்டும். ஜெபம் ஒன்றே ஆபிரகாம், மோசே ஆகியோருக்கு வல்லமையளித்தது. எனவே ஜெபம் எவைகளை யெல்லாம் செய்யக்கூடும் என்று சிந்தித்துப் பார்ப்போம்.

மன்றாட்டு

ஜெபத்தின் இன்னொரு முக்கியமான அம்சம் மன்றாட்டு. தேவனுடைய பிரதான ஆசாரியராகிய மன்றாட்டு வீரருக்கு தேவன் வைத்திருக்கும் பணிகள் எத்தனையோ!

நம்மில் சிலருக்கு தேவன் மன்றாட்டு அனுபவத்தை தந்திருப்பதற்காக அவரைத் துதிக்கிறேன். கிறிஸ்துவின் சபையின் பிரதிநிதிகளாக எவ்வளவு ஜெபம், பாவ அறிக்கை, வேண்டுதல் ஆகியவற்றால் தேவனுக்கு இளைப் பாறுதல் கொடாமலிருக்க வேண்டும். நமது இருதயங்களை தூய ஆவியானவருக்கு ஒப்படைத்து அவர் நமக்காக நம்மிலிருந்து பெருமூச்சுகளோடு விண்ணப் பங்களை ஏறெடுக்க முயற்சிப்போம்.

இந்த ஆவியானவர் என்னில் வாசம் பண்ண, நான் என்ன செய்ய வேண்டும்? ஆவியானவர் நம்மில் வாசம் பண்ண நம் இருதயத்தில் இடத்தையும் சமயத்தையும் கேட்கிறார். நம் இருதயத்தை முழுவதுமாக கேட்கின்றார். என்னிலிருந்து வெளிப்படும் யாவும் அவரை கனப்படுத்தி அவருக்கு மகிமையைக் கொண்டுவர வேண்டும்.

நீங்கள் உங்களை மன்றாட்டுக்கு அர்ப்பணித்தால் பல வருடங்களாகப் படுக்கையிலிருந்த ஒருவன் பெலன் பெற்றால் எப்படியிருப்பான், அப்படிப் பட்ட அனுபவத்தைப் பெறுவீர்கள்.

இன்று சபை மக்கள் அனைவரும் சுவிசேஷத்தை எட்ட என்ன செய்வது என்பது அடிக்கடி எழும்பும் கேள்வி. இன்றைய உலகின் நாஸ்திகத்துக்கும் லௌகீகத்துக்கும் மக்கள் விட்டு விடப் பட்டபடியால் உதவியற்றவர்களாக இக்கேள்வியைக் கேட்கிறோம். நம்பிக்கையை இழந்து என்ன செய்ய முடியும் என்று கேட்கிறோம்.

மக்கள் ஒருமனதோடு தேவனைத் தேடி தேவனைப் பிடித்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்யும் போது ஆவியானவர் இறங்கி வருவார். அது சமாதானம், இளைப்பாறுதல், ஆசீர்வாதங்கள் நிறைந்தது. அது சுயநல வாழ்வு அல்ல. கிறிஸ்து நாம் ஒரு பணி செய்யும்படி நம்மை அழைக்கிறார். கல்வாரியின் பணி நம் இருதயங்களில் நிறைவேற வேண்டும். நமது வாழ்வை மக்களுக்காக வேண்டுதல் செய்ய அர்ப்பணிக்க வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு நாளும் செய்வதால் அவரது தூய ஆவி நம்மில் கிரியை செய்து அவர் சந்தோஷப்பட ஜெபிப்போம்.

இந்த அற்புதமான இரகசியத்தை நினைத்துப் பார்ப்போம். பிதாவாகிய தேவன் சிங்காசனத்தில் இருந்து கொண்டே தமது மகிமையின் ஐசுவரியத்தின்படி நம்மை ஆசீர்வதிக்க ஆயத்தமாயிருக்கிறார். அவர் பிரதான ஆசாரியராயிருந்து இரவும் பகலும் மன்றாடுகிறார். உமது சபையை ஆசீர்வதியும் என்று இடைவிடாமல் மன்றாடுகிறார்.

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

பதில் பிதாவிடமிருந்து குமாரனுக்கும், அவரிடமிருந்து சபைக்கும் வருகிறது. நமது இருதயம் அடைக்கப் பட்டிருந்தால் அது எட்ட முடியாது.

நமது இருதயங்களைத் திறந்து நானும் ஒரு பிரதான ஆசாரியனாக தேவ பிரசன்னத்தில் பிரவேசித்து தொடர்ந்து அவரைப் பற்றிக் கொண்டு அழிந்து கொண்டிருக்கும் மக்களுக்காக மன்றாடினால் நலமாயிருக்குமே என்று ஜெபிப் போம்.

தேவன் விரும்புவது இயேசுவின் மன்றாட்டு. அது நமது இருதயங்களில் பிரதிபலிக்க வேண்டும். அப்படியிருந்தால் அவர் சந்தோஷப்படுவார். தமது பிள்ளைகளின் இருதயங்களை சோதிக்கிறவர் ஆவியானவரின் சிந்தையை அறிவார். ஏனெனில் அவர் நமக்காக தேவ சித்தத்தின்படி ஜெபிக்கிறார்.

பாவ பாரத்தை சுமக்க வேண்டும்

மக்கள் பாவம் செய்த போது எஸ்றா தனது வஸ்திரங்களைக் கிழித்து சாம்பலில் உட்கார்ந்து மக்களுக்காக பாவ அறிக்கை செய்தான். நெகேமியாவும் தேசம் பாவம் செய்த போது அவர்களது கீழ்ப்படியாமைக்காக பாவ அறிக்கை செய்து மனம் வருந்தினான். தானியேலும் இவ்வாறு செய்தான்.

விசுவாசிகளாகிய நமக்குப் பெரிய பணியிருக்கிறது. பாவமில்லாத இயேசுக் கிறிஸ்து பாவிகளோடு தண்ணீரில் இறங்கி ஞானஸ்நானம் பெற்றார். இந்த உலகில் வாழும் நாம் இந்த உலக மக்களின் பாவ பாரத்தை சுமக்க வேண்டாமா?

தேவன் தமது தூய ஆவியால் நமது இருதயங்களை நிரப்பி, சபையின் நிலைக்காக அவருக்கு முன்பாக அழுது புலம்ப உதவி செய்வாராக. அப்படி சபைக்காக ஜெபிக்கும் போது நமது பாவங்களையும் நாம் உணருவோம். ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட நிருபங்களில் ஐந்து நிருபங்கள் மனந்திரும்புதலின் அழைப்பாயிருக்கிறது. மனந்திரும் பாவிடில் வெற்றியும் ஆசீர்வாதமுமில்லை. எனவே சபைக்காக மன்றாடுவோம். தேவன் தாமே தமது கிரியையாகிய சபையை எழுப்புதலடையச் செய்வாராக.

- **ஊழியத்தில் ஜெபத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். அது மேலான பணி.**
- **ஜெபத்திற்கு அப்பாற்பட்டது எதுவுமில்லை. ஆனால் தேவ சித்தத்திற்கு அப்பாற்பட்டது மட்டுமே வெளியே நிற்கும்.**
- **நம்மைச் சுற்றி நடக்கிறவற்றிற்காக கண்ணீர் விட்டுக் கதறாவிட்டால், நாம் கிறிஸ்துவின் சிந்தையுடையவர்களல்ல.**
- **ஜெபம் ஒன்றே ஆபிரகாம், மோசே ஆகியோருக்கு வல்லமையளித்தது. எனவே ஜெபம் எவைகளையெல்லாம் செய்யக்கூடும் என்று சிந்தித்துப் பார்ப்போம்.**

தரிசு நிலத்தைப் பண்படுத்துதல்

Breaking up the fallow ground

(C.T.Studd என்பவரால் ஸ்தாபிக்கப்பட்ட W.E.C. மிஷனெறிகள் இருவரின் சாட்சிகள்)

ஒரு மிஷனெறி:

நான் இந்தியாவுக்கு வந்ததும், மற்ற மிஷனெறிகளைக் குற்றப்படுத்தி, நினைவாலும் வாக்காலும் சண்டையிட்டுக் கொண்டிருந்தேன். விசுவாசத்திலும் அன்பிலும் நான் குறைவுப்பட்டிருந்தேன். வானம் அடைபட்டிருக்கக் காரணம் அவர்களே என்று எண்ணினேன். எழுப்புதலுக்கான எனது ஜெபம் வீண் வார்த்தைகளாக இருந்தன. எனது கண்கள் சுவிசேஷம் அறிவியாத மக்களைப் பார்ப்பதற்குப் பதிலாக சுவிசேஷகர்களைப் பார்த்தன. என்னை நான் கவனித்த போது என்னிலுள்ள பலவீனங்களைக் கண்டு எழுப்புதலுக்காக ஜெபிப்பதை நிறுத்தி விட்டேன்.

என் ஜெபக் குறைவையும், காலை மாலை நான் செய்யும் பலவீனமான தியானங்களையும் தேவன் சுட்டிக் காண்பித்தார். ஆழமானதும், விடாப்பிடியானதுமான மன்றாட்டு எனக்குத் தேவை என்பதை உணர்ந்தேன். தொடர்ந்து எனது தனிப்பட்ட பாவம், மற்றும் பின்மாற்றம் ஆகியவற்றை உணர்த்தப்பட்டு என்னை ஜெபத்துக்கு ஒப்படைத்தேன். இருதயம் உடைந்து அவரது காயங்களைத் திரும்பத் திரும்ப பார்க்கவும் அவரது மன்னிப்பைக் கேட்கவும் முடிந்தது. அவரது பாடுகளைப் பார்த்த போது நடுங்கி என்மேல் கோபம் கொள்வாரோ என எண்ணினேன். ஆனால் அவர் தமது கிரீடம் சூடிய மகிமையைக் காண்பித்து என் பயத்தை நீக்கினார். அவர் தேவ ஆட்டுக் குட்டி. அவர் ஒரு முறை காயப்பட்டார். ஆனால் அவரது காயங்கள் நித்திய காலமாக நிலைத்து நிற்கும். தம்மையே நமக்காக அளித்தவரின் அன்பு ஒரு போதும் மாறுவதில்லை.

கிறிஸ்தவத்தில் தத்துவமல்ல, இயேசுக் கிறிஸ்துவே இருக்கிறார். ஜெபம் மந்தமாகும் போது ஒரு கடுதாசியில் என் இருதயத்தை எழுதுவேன். ஒரு பக்கத்தை நான் நிரப்புவதற்கு முன்பாக என் இருதயம் உடையும். நான் ஆண்டவரை மிகவும் அதிகமாக நேசிக்க ஆரம்பிப்பதால் அதிகமாக கண்ணீர் வடிப்பேன். என்னை மிகவும் தாழ்த்தி என் பாவங்களை அறிக்கையிடுவேன். எந்த கிறிஸ்தவ செயல்பாடும் எழுப்புதலின் வல்லமையின்றி அது ஆவியின் செயலல்ல. பல காரணங்களால் இந்த வல்லமை இழந்து போகலாம். விசுவாசக் குறைவு, கடின இருதயம் யாவும் பாவமே. ஆனால் தேவனால் கூடாதது எதுவுமில்லை.

ஒரு பெண் மிஷனெறியின் சாட்சி:

முதலாவது நாங்கள் எழுப்புதலுக்காக ஜெபிக்க ஆரம்பித்தபோது பின்னியின் எழுப்புதலைப் பற்றிய உரைகள் என்ற புத்தகத்தை பயன்படுத்தினோம். முக்கியமாக தரிசு நிலத்தைப் பண்படுத்துவதைக் குறித்துப் படித்தோம். காகிதத்தில் அறிக்கை பண்ணப்படாத பாவங்களை எழுதும்படி அவர் கூறியிருந்தார். தேவன் நம்மை எழுப்பு தலடையவும் பயன்படுத்தவும் முதலாவது இது அவசியம். நாங்கள் எண்ணாத பாவங்கள் எங்களிலிருப் பதை உணர்ந்தோம். நாங்கள் உதாசீனம் செய்திருந்த பாவங்களை துக்கத்தோடு அறிக்கையிட்டோம். பல ஆண்டுகள் அறிக்கையிடப்படாத பாவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வெளிப்படுத்தப் பட்டு அறிக்கையிடப்பட்டன. அவை தாங்கக் கூடாதவைகளாயிருந்தன. தூய ஆவியானவரின் முழுமையான தேவையை உணர்ந்தோம். எங்களை அவர் முற்றிலும் நிரப்ப நாங்கள் எங்களை முற்றிலும் வெறுமையாக்க வேண்டியிருந்தது.

நாட்கள் செல்லச் செல்ல ஆண்டவருக்கான தாகமும், அவரது நிரப்புதலும் எங்கள் வாஞ்சையாயிற்று. 'நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் திருப்தியடைவார்கள்' மத். 5:6 என்ற வசனம் என் உள்ளத்தில் ஓடிக் கொண்டிருந்தது. சாத்தானின் போராட்டம் ஆரம்பித்தது, அது நீடித்தது, ஜெப வாஞ்சை குறைந்தது. உள்ளம் பரம காரியங்களை வாஞ்சித்தாலும் காணக் கூடிய பொருட்களைக் குறித்துப் பேசிக் கொண்டிருந்தோம்.

ஒரு நாள் ஆண்டவர் தமது நிறைவைத் தரக் காத்திருப்பதை உணர்ந்தோம். இணைந்து ஜெபித்தோம். கிறிஸ்துவோடு பங்கு பெறும் உணர்வும் அவரது பிரசன்னமும் அறையில் இருப்பதை உணர்ந்தோம். அவரது கரங்களையும் விலாவையும் காண்பிப் பதைக் காண கண்களைத் திறந்தேன். அன்றே என்னை முழுவதுமாக அவரது கரத்தில் ஒப்புவித்து விட்டேன். நான் அவரது கரத்தில் விசேஷமாக வைக்கப் பட்டிருப்பதால் எனது காலம், பணம், பாசம், தாலந்துகள் எல்லாவற்றையும் அவருக்காக அர்ப்பணித்து விட்டேன். அவருடைய நிறைவு எனக்கு சொந்த மாயிற்று.

இரட்சகரே, விசுவாசத்தால் நான்
உம்மைத் தொடுகிறேன்
எல்லா நன்மைக்கும் நீர் தான் உறைவிடம்
விசுவாசத்தோடு நற்பண்புகளுக்காகக்
கேட்கிறேன்
உமது இரத்தத்தால் என்னைக் கழுவியருளும்

எங்கள் இதயங்கள் எதனை வாஞ்சித்ததோ அதனை அவர் அளிக்க ஆரம்பித்து விட்டார். நாங்கள் சந்தோஷத்தாலும் நம்பிக்கையாலும் நிரப்பப் பட்டோம். கிறிஸ்துவோடு ஒரு புது வாழ்வில் பிரவேசிக்கிறோம் என்ற உணர்வு ஏற்பட்டது. இப்போது கிறிஸ்து என்னோடு அதிக நெருக்கமாயிருப்பதை

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

உணருகிறேன். இன்னும் நான் வாஞ்சித்தால் என்னை நிரப்ப அவர் ஆவலாயிருக்கிறார்.

அதற்குப் பின் சாத்தான் எங்களை சோதிக்கவும் வலையில் அகப்படுத்தவும் முடியவில்லை. ஆனாலும் இன்னும் நாங்கள் திருப்தியடைய வில்லை. நாங்கள் தேவனிடமோ மனிதரிடமோ அறிக்கையிட வேண்டிய எல்லாவற்றையும் அறிக்கையிட்டோம்.

அனுதினமும் சுயத்தை சிலுவையிலறைதல்

தேவன் எங்கள் கண்களை சிலுவைக்கு நேராகத் திருப்பினார். கிறிஸ்து எங்களுக்காக எவ்வளவாகப் பாடுபட்டார் என்பதை ஆழமாக உணர்ந்தோம். ஒவ்வொரு முறை சிலுவையை நாங்கள் ஏறிட்டுப் பார்த்த போதும் எங்கள் உள்ளம் உருகியது.

கிறிஸ்துவின் பிரசன்னத்தை வெகுவாய் நான் உணர்ந்தேன். நான் முழங்காலில் நின்று எனக்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியை ஆராதித்தேன். அவர் உயிரோடிருக்கிறார்! அவர் உயிரோடிருக்கிறார்! எனது வாழ்வில் முதல் முறையாக அவரை ஆராதிப்பது போல உணர்ந்தேன். அதிலிருந்து கிறிஸ்துவுடன் ஒரு புதிய உறவை உணருகிறேன். ஜெபிப்பதற்கான புதிய ஆசையையும், வேதத்தை வாசித்து அதைப் புரிந்து கொள்வதற்கான புதிய கிருபையையும் பெற்றேன்.

நாட்கள் செல்லச் செல்ல ஆண்டவர் தமது சிலுவையை எங்கள் இருதயங்களில் தந்தார். அதனால் இன்னும் அனேக காரியங்களை அறிக்கை செய்யவும், அனேக காரியங்களை ஆண்டவர் காண்பிக்கவும் கூடிய தாயிருந்தது. எனவே எல்லாவற்றையும் அறிக்கை செய்து சிலுவையிலறைந்தோம்.

அந்த நாட்களிலெல்லாம் ஆண்டவரை ஆராதித்து மகிமைப்படுத்திக் கொண்டிருந்தோம். எங்கள் கண்கள் சிலுவையையே நோக்கிக் கொண்டிருந்தன. Mrs. Ben Louis எழுதுவது போல சிலுவை ஆவியானவருக்கும், ஆவியானவர் நம்மை சிலுவைக்கும் வழி நடத்துகின்றன.

விசுவாசம் தேவ வசனத்தைக் கனப்படுத்துகிறது. தேவன் விசுவாசத்தை கனப்படுத்துகிறார்.

பின்பு தேவன் அவரைக் கனப்படுத்தும் வேறு வழிகள் இருப்பதைக் காண்பித்தார். ரோமர் 4:20, 21 வசனங்கள் எங்களோடு பேசியது. "தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய் சந்தேகப்படாமல் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறை வேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி விசுவாசத்தில் வல்லவனானான்." இவ்வாறு தேவனையும் அவரது வசனத்தையும் உறுதியாய் விசுவாசித்து அவரை மகிமைப்படுத்தலாம் என்று கண்டு கொண்டோம். அவ்வேளையில் எழுப்புதலின் புதிய வாக்குத்தத்தம் எங்களுக்கு அருளப் பட்டது. யோவா. 7: 37,38 இந்த வாக்குத்தத்தத்தின் மீது விசுவாசத்தோடு ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்ற நிச்சயத்தோடு உறுதியாயிருந்தோம்.

கிறிஸ்துவின் வெற்றி

யோசுவா ஐந்தாம் அதிகாரத்தில் கர்த்தருடைய சேனையின் தலைவனுடைய காட்சியைக் காண்கிறோம். அது எங்களுங்கு உதவியாயிருந்தது. வெளியரங்கமான சண்டையோடு வெளிக்குத் தெரியாத போராட்டம் இணைந்திருந்தது. கர்த்தருடைய சேனையின் தலைவன் உருவின பட்டயத்துடன் அந்தகாரத்தை விலக்கி முன்னே செல்கிறார். நாமும் அந்தகார லோகாதிபதிகளோடும், துரைத்தனங்களோடும், பொல்லாத ஆவிகளோடும் போராட வேண்டும். ஆனால் அவற்றை விரட்டியடிக்க சேனாதிபதி நமக்கு முன்னே செல்லுகிறார். இந்த அறிவு நமக்கு இருக்கும்போது ஆவிக்குரிய எரிகோவைக் கண்டு நாம் பயப்பட மாட்டோம். சாத்தானை முறியடித்து கல்வாரியின் வெற்றியைப் பெறுவோம்.

எதிரியின் மேல் வெற்றியைப் பெறுவோம்,
இயேசுவின் நாமத்தில் இப்போது வெற்றி.
நரகத்தின் லேகியோன்களெல்லாம் ஓடட்டும்
கல்வாரியின் வெற்றிக்கு முன்னால்.
மனிதன் வெற்றிபெற இயேசு மரித்தார்,
சுயத்தின் மேலும் பாவத்தின் மேலும் வெற்றி.
அவர் பிசாசின் வல்லமையை உடைத்து விட்டார்.
எனவே எதிரியின் மேல் வெற்றியைக் கூறுவோம்.
இயேசுவின் நாமத்தில் இப்போது வெற்றி.
கிறிஸ்துவின் வெற்றியைக் கூறுவோம்.
அவரோடு கல்வாரியில் நிற்போம்.
இன்றே நமது வாழ்வில் வெற்றி.
யாருக்காக ஜெபிக்கிறோமோ
அவர்கள் வாழ்விலும் வெற்றி.
அந்தகார சேனைகள் முன்னே ஓடட்டும்,
பூமியும் வானமும் வணங்குகிறவருக்கு முன்னே.
இயேசு நமது ஆண்டவர்,
நமது ஜீவன், நமது ஒளி,
அவரது மிகப்பெரிய சக்தியோடு அனுப்புகிறார்.
இயேசுவின் நாமத்தில் இப்போதே வெற்றி
மேற்கொள்ளப்பட்ட எதிரியின் மேல்

எங்கள் ஜெபக் கூடுகைகளில் ஜெபத்தின் மகிமையான சுயாதீனத்தையும், கேட்பதற்கான விசுவாசத்தையும் பெற்றோம். வெற்றி ஏற்கெனவே நமக்காக கிடைத்து விட்டது. கொள்ளைப் பொருட்கள் காத்திருக்கின்றன.

இருதயத்தை ஆராய்ந்து பார்க்கும் தேவனுடைய ஒளி

God's heart - searching light

Charlie Orr.

'கர்த்தருடைய மகிமை தேவனுடைய ஆலயத்தை நிரப்பிற்று' *2 நாளா. 15: 14*

சபைக்கு தேவனுடைய மகிமை மீண்டும் வரவேண்டியது மிகவும் அவசியம். நீண்ட காலமாக அவரது பிரசன்னமின்றி திருப்தியாக இருந்து விட்டோம். நமது மத்தியில் பரிசுத்த தேவனுடைய வெளிப்பாட்டை நாம் அனுபவிக்காதபடியால் அவர் விலகி விட்டதையும் அறியாமல் இருக்கிறோம்.

வேத வசனங்களெல்லாம் தேவ பிரசன்னத்தின் வெளிப்பாட்டினை நினைவுபடுத்துகின்றன. தேவ பிரசன்னம் வெளிப்படும்போது ஆழமான பாவ உணர்வு மக்களின் இருதயத்தைப் பற்றிக் கொள்ளும்.

A.T. பீயர்சன் என்பவர் 'தம்மை வெளிப்படுத்தி நம்மைத் திறந்து காட்டும் தேவனுடைய உறவால் ஆச்சரியப்படத் தேவையில்லை' என்கிறார். 'வெளியரங்கமாக்குகிறதெல்லாம் வெளிச்சமாயிருக்கிறது' எபேசி. 5: 13. அந்த ஷெக்கெய்னா அக்கினிக்கு முன்பாக நெடுநேரம் நிற்போமானால் அதன் பொன்னிற இறகுகளும், கேரூபின்களின் பிரகாசமான முகங்களும் நமக்குள் ஊடுருவி, இதயத்தில் மறைந்திருக்கிற எண்ணங்களையும், விருப்பங்களையும் வெளிப்படுத்தும் பட்டயமாகிய ஜீவவாலை ஆத்துமாவையும் ஆவியையும் கூறாகப் பிரிக்கும்.

தானியேல் குற்றமற்றவன். அவனது எதிரிகள் அவனில் எந்தக் குற்றத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை. தேவனிடத்திலிருந்த அவனது விசுவாசமும், இடைவிடாத ஜெபமும் மட்டுமே அவர்களால் கண்டுபிடிக்க முடிந்தவைகள். ஆனாலும் ஆராய்ந்து பார்க்கும் ஒளியின் மகிமையில் அவனது பெலனெல்லாம் போய், அவனது உருவம் மாறி வாடி திடனற்றுப் போனதாக தானி. 10: 8ல் படிக்கிறோம். ஏசாயா அவரது பிரசன்னத்தில், "ஐயோ நான் அதமா னேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷன், அசுத்த உதடுகளுள்ள ஜனங்களின் நடுவில் வாசமாயிருக்கிறேன், சேனைகளின் கர்த்தராகிய ராஜாவை என் கண்கள் கண்டதே" ஏசா. 6: 5 என்று கதறினான்.

பேதுருவும் இப்படிப்பட்ட ஒரு வெளிப்படுத்தலைப் பெற்றான். இயேசுவின் பாதங்களில் அவன் விழுந்து, "ஆண்டவரே நான் பாவியான மனுஷன் நீர் என்னை விட்டுப் போக வேண்டும் என்றான்" லூக். 5:8. இவையெல்லாம் தெய்வீகக் காட்சியாயிருப்பதால் இந்த சுயவெளிப்பாடும், சுய குற்றச்சாட்டும் ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகின்றன.

வேதவசன அடிப்படையிலான எழுப்புதல் வரும்போது அதற்கு முன் ஒரு இயற்கைக்கு மேலான தேவ பிரசன்னம் விளங்குகிறது. அவர் வரும் போது பாவம் வெளிப்படுத்தப்படும். சுயம் அகற்றப்படும். சாத்தான் அழிக்கப் படுவான். கர்த்தரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுவோம். அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுவோம்.

மிஷனெறிப்பணி மகிமையானது

Missionary work is glorious

Andrew Murray

"பின்பு அவர் அவர்களை நோக்கி நீங்கள் உலகம் எங்கும் போய் சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்..... அவர்கள் புறப்பட்டுப் போய் எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியை நடப்பித்து அவர்களால் நடந்த அடையாளங்களினால் வசனத்தை உறுதிப்படுத்தினார்". மாற். 16: 15-20.

இயேசுவை நேசிக்கிற எவரும் ஊழியத்தை நேசிப்பார்கள். எங்கு ஆரோக்கியமான ஆவிக்குரிய வாழ்வு இருக்கிறதோ அங்கு ஊழியத்தின் மீது அன்பு காணப்படும். இதற்கான காரணத்தை ஆராயும் போது மிஷனெறிப் பணியின் உட்பார்வையின் மகிமையைக் கண்டு இந்தப் பணியை உங்கள் ஆத்தும வாழ்வின் ஒரு பகுதியாக்கிக் கொள்வீர்கள். மிஷனெறி பணி மகிமையானதும், விலையேறப் பெற்றுமிருக்கக் காரணங்கள் எவை என்று சிந்திப்போம்.

1. இதற்காகவே இயேசு பரலோக சிங்காசனத்தை விட்டார்:

தேசங்களெல்லாம் பிதாவினால் இயேசுவுக்கு அளிக்கப்பட்ட சுதந்தரம். சங். 2:8. சாத்தானின் சக்திகள் இவ்வுலகில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இயேசு ஜெயங்கொண்டு தமது உரிமையை நிலைநாட்டியிருக்கிறார். மிஷனெறி பணிகளைச் சார்ந்துதான் அவரது மகிமை, வருகை, அவரது ராஜ்யத்தின் வெளிப்பாடு ஆகியவை காணப்படும்.

(மத். 24: 14; 28: 18-20)

2. பூமியில் மிஷனெறிப்பணிதான் சபையின் முக்கிய பணி:

ஆண்டவராகிய இயேசுவின் கடைசி வார்த்தைகள் இதை நமக்கு அறிவுறுத்துகின்றன. *(மாற். 15: 16, அப். 1: 8)* ஆண்டவராகிய இயேசு தலையாகவும் சபை சரீரமாகவும் அவயவங்களாகவும் இருப்பதால் அவைகளை நம்பியே அவர் பணி செய்யக்கூடும். கிறிஸ்துவின் அங்கமாகவும் சபையின் அவயவங்களாகவும் அவருடைய நோக்கம் நிறைவேற இந்தப் பணியை நாம் நிறைவேற்ற வேண்டும்.

3. இதற்காகவே பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டார்:

ஆவியானவரின் வாக்குத்தத்தத்திலும் அவரது வழிநடத்துதலிலும் கிருபையாக பேதுரு, பர்னபா, சவுல் ஆகியோருக்கு இப்பணி கொடுக்கப்பட்டதைக் காணலாம். அப். 11:12; 13:2 சபை வரலாற்றில் எழுப்புதலின் காலங்களில் ஒரு புதிய மிஷனெறி பணி உற்சாகத்தோடு இணைந்து சென்றதைக் காணலாம். தூய ஆவியானவர் தேவ ராஜ்யம் விரிவடைய எப்போதும் தூய கருவியாக இருந்திருக்கிறார்.

4. மிஷனெறிப் பணி சபைக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது:

மிஷனெறிப் பணி விசுவாசத்தின் தீரச்செயல்களையும் சுய வெறுப்பையும், அர்ப்பணத்தையும் ஆண்டவரின் ஆச்சரியமான வல்லமைக்கு மகிமையான எடுத்துக்காட்டுகளையும் உடையது. இரட்சிப்புக்காக அன்போடும், ஜெபத்தோடும் காத்திருக்கும் பாவிகளுக்கு அது மனந்திரும்புதலைக் கொடுக்கும்போது பரலோகம் சந்தோஷப்படுகிறது. தேவ திட்டங்களைப் புரிந்து கொள்ளத்தக்கதாக இருதயங்களைச் சுத்திகரித்து வேண்டுதல்கள் மூலம் அவை நிறைவேற்றப்பட உதவுகிறது. ஒரு சபையில் ஜீவன் இருப்பதைக் காண்பித்து இன்னும் அதிக ஜீவனையும் கொண்டு வருகிறது.

5. மிஷனெறிப் பணி உலகுக்கு ஒரு பெரிய ஆசீர்வாதம்:

ஐரோப்பாவில் அல்லது இந்தியாவில் வாழ்ந்த நமது இரட்சிக்கப்படாத முற்பிதாக்களிடம் மிஷனெறிகள் வராதிருந்தால் இன்று எப்படி இருந்திருப்பார்கள்? மிஷனெறிப்பணி எத்தனை தேசங்களில் மகத்தான பணிகளைச் செய்திருக்கிறது; இரட்சிக்கப்படாத மக்களின் நிலை என்னவாயிருக்கும்; இக்களங்களிலெல்லாம் கிறிஸ்துவின் வல்லமை சாத்தானின் வல்லமையை எதிர்த்துப் போராடி வெற்றி பெற்றுள்ளதே.

4. மிஷனெறிப் பணியை நேசிப்பதால் உங்களுக்கு ஆசீர்வாதம்:

இது உங்கள் விசுவாசத்தைப் பயிற்சிப்பதற்கான ஒரு வாய்ப்பு. இந்தப் பணியில் தேவனுடைய வசனத்தையும், வார்த்தையையும் சார்ந்தே வாழ வேண்டும். மனிதரை சார்ந்து இதைச் செய்ய முடியாது. ஆண்டவரையே பற்றிக் கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

இதனால் அன்பு தூண்டப்படுகிறது. உங்கள் ஆண்டவரும் அரசருமாகிய தேவனுக்கு நேராக நீங்களும் உங்களைச் சார்ந்தவர்களும் திறந்த கண்களோடும், பரந்த இருதயத்தோடும் சென்று அவருடைய வாஞ்சையை மட்டும் நிறைவேற்றுவீர்கள். உங்களில் காணப்படும் அன்புக் குறைவைக் காணவும், அவருடைய அன்பை அதிகமாய்ப் பெறவும் கூடும்.

நீங்கள் அதிகமாய் ஜெபிக்கத் தூண்டப்படுவீர்கள். ஒரு மன்றாட்டு வீரராக உங்கள் அழைப்பும், வல்லமையும் உங்களுக்குத் தெளிவாகி, தேவராஜ்யத்தின் விரிவுக்காக நீங்கள் செய்யும் பணியினிமித்தம் ஆசீர்வாதமும் பெறுவீர்கள். இழந்து போனவர்களைத் தேட வந்த ஆண்டவரோடு நெருங்கிய உறவு ஏற்படுகிறது. நீங்களும் உங்களை அர்ப்பணித்து இழந்து போனவர்களுக்காக நடைபெறும் அன்பின் ஜெப போராட்டத்தில் இணைந்து கொள்வீர்கள்.

நீங்கள் எண்ணுவதைவிட இப் பணி மகிமையும் தூய்மையுமானது. நீங்கள் நினைப்பதைவிட அதில் மிகமிக ஆசீர்வாதங்கள் உண்டு. நீங்கள் அதைப் புரிந்து கொள்ள முடியாது. எனவே தேவ வசனத்துக்குக் கீழ்படிந்து மிஷனெறி ஊழியங்களுக்கு உங்கள் இருதயத்தில் அதிக இடங்கொடுங்கள். ஆண்டவர் தாமே இன்னும் உங்களைப் போதித்து ஆசீர்வதிப்பார்.

மிஷனெறி ஊழியத்தின்மீது உங்கள் அன்பைப் பெருக்க கீழ்குறிப்பிடும்ஆலோசனைகளைக் கேளுங்கள்:

மிஷனெறிப் பணிகளைக் குறித்து நன்கு தெரிந்து கொள்ளுங்கள். அதனைக் குறித்த செய்திகளைப் படித்து தேசத்தின் நிலைமையையும் தேவைகளையும் தெரிந்து கொள்ளுங்கள். கடந்த காலத்தில் அவர்கள் பெற்ற நன்மைகளையும், இப்போது நடைபெறும் பணி களையும் அறிந்து கொள்ள முயற்சியுங்கள். மற்றவர்களிடமும் இதைக் குறித்துப் பேசுங்கள். சிலவேளை நீங்களே உங்களருகாமையில் ஒரு சங்கத்தை ஸ்தாபிக்கலாம். உங்கள் ஜெப கூடுகைகளில் ஏதேனும் ஒரு சமயத்தை இப்பணிக்காக ஜெபிக்க பயன்படுத்துங்கள். நீங்கள் தனியாகவும் ஜெபிக்கலாம். தேவனுடைய வார்த்தைகளில் காணப்படும் வாக்குத்தத்தங்களைப் பிடித்துக் கொள்ளுங்கள். குறிப்பாக ஏசாயா 49:6; 60:1-3 வசனங்களை உறுதியாகப் பற்றிக்கொள்ளுங்கள். மிஷனெறிப் பணிக்காகக் கொடுங்கள். கேட்கும் போது மட்டுமல்ல, அல்லது தாராளமாக இருக்கும் போது மட்டுமல்ல, உங்கள் வருமானத்தின் ஒரு பகுதியையோ அல்லது உடைமையில் ஒரு பகுதியையோ ஒதுக்கி வையுங்கள். அவரது பணியில் நீங்கள் உத்தமமாயிருப்பதை தேவன் கண்டால் அது ஆசீர்வாதம். உங்கள் பகுதியில் நடைபெறும் ஏதேனும் மிஷனெறிப் பணியில் நீங்களும் ஈடுபடுங்கள்.

தேவ குமாரனே, நீர் உமது ஆவியை உமது சீடர்கள் மீது ஊதி, பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்லி விட்டு, 'என் பிதா என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன்' என்று சொன்னீர். ஆண்டவரே, இதோ நானிருக்கிறேன் என்னையும் அனுப்பும். உமது ராஜ்யம் கட்டப்பட நான் வாழட்டும். ஆமென்.

நாம் ஜெபத்தில் உறுதியாயிராவிட்டால் நாம் கிறிஸ்துவோடில்லை. ஜெபம் நமக்கு ஜீவன். அதுவே நமது ஆவிக்குரிய வளர்ச்சியின் அளவு கோல்.

தேவனுடைய அக்கினியாகிய அவருடைய தூய்மை, அன்பு, வலிமை ஆகியவற்றைப் பெற அவரோடுள்ள உறவில் அதிக நேரம் கொடுக்க வேண்டும்.

கிறிஸ்துவின் வருகைக்காக நம்மை பரிசுத்தமாக்குவோம்

Purifying ourselves for Christ's return.

Rich Carmicheal

இயேசு சிலுவையில் மரித்த போது தாம் காண்பிக்கக்கூடிய மிகப் பெரிய அன்பை நமக்கு வெளிப்படுத்தி விட்டார். "ஒருவன் தன் சினேகிதருக் காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பி லும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலு மில்லை" யோவான். 15: 13. மேலும் அவர் கொடுக்கக்கூடிய மிகப் பெரிய பரிசை நமக்கு அளித்திருக்கிறார். அவர் "சபை யில் அன்புகூர்ந்து தம்மைத் தாமே அதற் காக ஒப்புக் கொடுத்தார்" எபே. 5: 25, 27. அவர் தம்மை அர்ப்பணித்து தமது சொந்த விலையேறப்பெற்ற இரத்தத்தாலே மீட்டுக் கொண்டார். 1 பேதுரு. 1: 18-19

அவரது மிகப்பெரிய தியாகம் அவர் எவ்வளவாய் நம்மை நேசிக்கிறார் என்பதையும் நம்மைப் பாவத்திலிருந்து மீட்க எத்தனை ஆவலாயிருக்கிறார் என்பதையும் காண்பிக்கிறது. "அவர் நம்மை சகல அக்கிரமங்களினின்றும் மீட்டுக் கொண்டு தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர் களாகவும் நம்மை சுத்திகரிக்கும்படி நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார்" தீத்து. 2: 14.

அவர் திரும்ப வரும் நாள் நெருங்கி வருகிறது. அந்த நாளில் நமக்காகத் தமது ஜீவனையும் இரத்தத் தையும கொடுத்த அவரைப் பார்ப் போம். "ஆகிலும் அவர் வெளிப்படும் போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரை தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கி றோம்". 1 யோவான். 3: 2

தூய்மையும், பரிசுத்தமுமான வாழ்வு வாழ்கிறீர்களா? அல்லது பாவத்தில் தொடர்ந்து நிலைத்திருக்கிறீர் களா? "அவர் நம்முடைய பாவங்களை சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள். அவரிடத்தில் பாவமில்லை. அவரில் நிலைத்திருக்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை". 1யோவா. 3: 5,6

அவர் அளித்த பரிசை எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டாம். அது மிகவும் விலையேறப்பெற்றது.

நமக்காக இயேசுக் கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிய தியாகம் மிகவும் விலையேறப்பெற்றதும் மதிக்கத் தக்கதுமாகும். எபிரெயருக்கு எழுதப் பட்ட நிருபத்தில் இதைக் குறித்து சொல்லப்பட்ட எச்சரிக்கையை எபி. 10: 26,29 வசனங்களில் வாசிக்கலாம். "தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்துத் தன்னைப் பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்த மென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப் பான் என்பதை யோசித்துப் பாருங்கள்".

இந்த சத்தியத்தை அறிந்தும் ஒருவர் மனப்பூர்வமாய் பாவம் செய்வது எத்தனை துக்கமானது! நாம் கிறிஸ்துவை மரியாதையுடன் பாவித்து அவரது விலையேறப் பெற்ற இரத்தத்தை மதிக்க வேண்டும். அவர் வருகைக்காக காத் திருக்கிற நாம் 2 பேதுரு 3:14ன்படி "கறையற்றவர்களும் பிழையில்லாதவர் களுமாய் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதை யாயிருக்க வேண்டும்".

அப்போஸ்தலனாகிய பவுல் தீத்து. 2: 13 வசனங்களில் போதிப்பது போல் நாம் லௌகீக இச்சைகளை வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும், தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுல கத்திலே ஜீவனம் பண்ணி, நாம் நம்பி யிருக்கிற ஆனந்த பாக்கியத்திற்கும் இயேசுக் கிறிஸ்துவினுடைய மகிமை யின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த் திருக்க வேண்டும். மேலும் அவர் கொலோசேயருக்கு இவ்வாறு எழுது கிறார்: "நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப் படுவீர்கள். ஆகையால் விபசாரம், அசுத்தம் இவைகளைப் பூமியில் உண்டு பண்ணும் உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள். இவைகளின் பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவ கோபாக்கினை வரும். நீங்களும் முற்காலத்தில் அவர் களுக்குள்ளே சஞ்சரித்த போது அவை களைச் செய்து கொண்டு வந்தீர்கள். இப்பொழுதோ கோபமும், மூர்க்கமும், பொறாமையும், உங்கள் வாயில் பிறக்க லாகாத தூஷணமும், வம்பு வார்த்தை களுமாகிய இவைகளை விட்டு விடுங் கள்". கொலோ. 3: 4-8.

கிறிஸ்துவை கனத்தின் பொருட்டும், அன்பு பாராட்டுதல் ஆகியவற்றிற்காகவும், அவர் வருகையின் நாளுக்கான எதிர்பார்ப்பிற்காகவும் பாவத்தை விட்டு விட்டு பரிசுத்தத்தைத் தழுவிக் கொள்வோம். நாம் இப் பொழுதும், நித்தியத்திற்கும் ஆசீர்வதிக் கப்படுவதோடு நமக்காகத் தமது விலையேறப் பெற்ற இரத்தத்தை சிந்தி நம்மை இரட்சித்து பரிசுத்தப்படுத்திய இரட்சகரையும் கனப்படுத்துவோம்.

"சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கு வாராக. உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து வரும்போது குற்ற மற்ற தாயிருக்கும்படி காக்கப்படுவதாக". 1 தெச. 5: 23

கிருபையின் வல்லமை

The Power of grace

Otto Stock Mayer (1838 - 1917)

"ஏனெனில் எல்லா மனுஷ ருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவ கிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளை யும் வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுல கத்தில் ஜீவனம் பண்ணி, நாம் நம்பி யிருக்கிற ஆனந்த பாக்கியத்திற்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுக் கிறிஸ்துவினுடைய மகிமை யின் பிரசன்னமாகுதலுக்கு எதிர் பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்கு போதிக்கிறது. அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக் கியமுள்ளவர்களாகவும் நம்மை சுத்தி கரிக்கும்படி, நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக் கொடுத்தார்" தீத்து. 2: 11-14.

கிறிஸ்துவினால் மீட்பு நமக்குத் தரப்பட்டது. எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அறிவிக்கும் நாம் வல்லமைப்படுத்தப்பட நமது முந்திய மனவழிவை மாற்றி, இச்சை நிறைந்த உலகை விட்டு அகற்றி, தவறு அநீதி ஆகியவற்றை விட்டு விலக வேண்டும். தேவ கிருபை நம்மை அனைத்துப் பாவங்களிலுமிருந்து கட்டவிழ்க்கவும் கழுகவும் கூடியது. நாம் ஆண்டவராகிய இயேசுவின் வருகைக்காக காத்திருக்கி றோம். இங்கு அவருடைய கிருபையால் தேவனைப் பிரியப்படுத்தும் ஒரு வாழ்வு வாழ முடியும். அவர் இவ்வுலக வாழ்வில் ஒரு கைதியைப் போல் வாழ்ந்து நமக்கு விடுதலை தந்தார்.

இப்போது நம்பிக்கையின் கேள்வி எழும்புகிறது. நமக்கு முன்னால் என்ன வைக்கப்பட்டிருக்கிறது என்று கண்டால் மட்டுமே நமக்காகக் காத் திருக்கும் சோதனைகளில் கறை படா மலும், இரட்சகருக்கு உண்மையா யிருக்கவும் முடியும். விசுவாசம் கிருபை யின்மேல் நகருகிறது. அதன் கண்கள் வரப்போகிற இயேசுக் கிறிஸ்துவை நோக்கி இருக்கின்றன. அவர் வருகை சமீபமென்றாலும் மக்கள் ஆயத்தமாக அவர் எதிர்பார்த்திருக் கிறார்.

இந்த உண்மையை அறிந்து கொண்டவர்கள் தங்கள் மாம்சத்திலும் ஆவியிலுமுள்ள அசுத்தங்களை கால தாமதமின்றி கழுகி சுத்தம் பண்ணு வார்கள்.

கிருபையின் வல்லமையைக் கேட்டிருக்கிறீர்கள். அதில் உங்கள் நம்பிக் கையை வையுங்கள். நாம் கிருபைக்கு இடம் கொடுக்கும்போது அது நம்மை உருவாக்கும். நமது கடந்த கால அறிவீனம் மற்றும் அனைத்து நுகங் களிலுமிருந்து உங்களை விடுவிக்கும்..

நாம் ஜெபிக்கவில்லையென நான் கூறவில்லை; மெய்தான், நாம் விண்ணப்பம் பண்ணுகிறோம்; ஆனால் நாம் நம் உள்ளத்தில் வேதனையோடு கெஞ்சுகிறோமா?

(2-ம் பக்க தொடர்ச்சி)

ஆசிரியரின் அன்பான வேண்டுகோள்

வருடத்திற்கு ஒரு முறை சந்தா காணிக்கை அனுப்புகிற வாசகர்கள், கடந்த ஆண்டுகளை போல ரூபாய் 100, 200 என்று அனுப்பாமல், குறைந்த பட்சம் ரூபாய் **500** அனுப்புங்கள்.

மாதந்தோறும் பத்திரிக்கை

'**வருகையின் தூதன்**' ஆங்கிலம் உட்பட பிற மொழிகள் கொரோனா காலத்திற்கு பின் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மட்டும் வெளியிடப்படுகிறது. வருகையின் தூதன் தமிழ் மாத்திரமே மாதந்தோறும் மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் அச்சிடப்பட்டு அனுப்பப் படுகிறது. ஊழியம் சம்பந்தமான இரண்டு உதாரணங்களை கீழே எழுதுகிறேன்.

1. வருகையின் தூதன் பத்திரிக்கை ஊழியம்:

நமது கட்டடத்திலுள்ள ஒரு பெரிய அறையை புதுப்பிக்க வேண்டிய தாயிற்று. ஒரு மின்விசிறியை பொருத்தி, சில மின் விளக்குகளை பழுது பார்க்க பகல் 2.00 மணி ஆனது. சம்பளமாக ரூபாய் 600 கொடுத்தோம். கட்டடம் சம்பந்தமாக எந்த வேலையானாலும் **ஒரு நாள் சம்பளம்** ரூபாய் 800 முதல் 1200 வரை கேட்கிறார்கள்.

2. ஸ்தானாபதி பத்திரிக்கை ஊழியம்:

கடந்த ஆண்டை நாங்கள் திரும்பிப் பார்த்து கர்த்தருக்கு நன்றி யையும், துதியையும் ஏறெடுக்கிறோம். வாசகர்களாகிய நீங்கள் அனுப்பிய காணிக்கை மற்றும் சந்தா ரூபாயைக் கொண்டு இவ்வூழியம் இம்மட்டும் நடைபெற கர்த்தர் உதவி செய்தார். கடந்த சில ஆண்டுகளாக "**ஸ்தானாபதி ஜெப ஞாயிறு**" மூலமாக தமிழ்நாட்டில் உள்ள பல சபைகள் இவ்வூழியத்தைக் குறித்து சபையில் அறிவித்து, சபையார் ஊக்கமாக ஜெபித்தும் காணிக்கை எடுத்தும் அனுப்பியதால் இவ்வூழியம் கடன் இல்லாமல் நடைபெற கர்த்தர் உதவி செய்துள்ளார். சில சபைகளும், கர்த்தருடைய பிள்ளைகளும் ஒவ்வொரு மாதமும் தவறாமல் ஒரு குறிப்பிட்ட தொகையை அனுப்புகிறது இவ்வூழியத் திற்கு மிக உதவியாக உள்ளது. இவ்வித மாய் தேவன் அற்புதமாய் இந்த ஊழியத்தை இதுவரை எங்கள் தகுதி யின்மையை பாராது தம்முடைய உண்மையினிமித்தம் தாங்கி நடத்தி வந்துள்ளார். அவருக்கே சகல மகிமை யையும் கனமும் உண்டாவதாக.

ஸ்தானாபதி மே 2022 தமிழ் கிறிஸ்தவ குடும்ப மாத இதழ் துவங்கிய ஆண்டு 1951

வருகையின் தூதன் ஊழியத் திற்கு வெளிநாட்டு உதவி கிடையாது. நாம் எந்த சபைப் பிரிவையும் சார்ந்தவர் களல்ல, எனவே **சபை ஊழியம் கிடையாது**. சென்னையை சார்ந்த அன்புள்ளம் கொண்ட ஒரு சபை போதகர் குடும்பம், வருகையின் தூதன் அலுவலக கட்டடத் திற்கு வர்ணம் பூசி உதவி செய்தார்கள். "தேவனுடைய வீடு" கட்டட வேலையை முடிக்க உதவினார்கள். பின்பக்க காம்பவுண்ட் சுவர் இடிந்து விழுந்த போதும் அதிகமாக உதவிச் செய்தார்கள்.

வருகையின் தூதன் ஊழியத்திற் காக தேவனுடைய பிள்ளைகள் தினந் தோறும் ஜெபியுங்கள். கர்த்தர் உங்க ளுக்கு இரங்குகிறபடி தாராளமாய் உதவி செய்யுங்கள்.

இஸ்ரவேலே, நீ பாக்கியவான்; கர்த்தரால் ரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவன் யார்? உனக்குச் சகாயஞ் செய்யும் கேடகமும் உனக்கு மகிமை பொருந்திய பட்டயமும் அவரே; உபாகமம் 33:29

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

அலுவலகம் : 95432 21008
உதவி : 94897 40295

உங்கள் சகோதரன்
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

தூய ஆவியானவர் ஜெபத்தில் நம்மை நடத்துகிறார்

The Holy Spirit guides us in Prayer

Charles H. Spurgeon

எவைகளைக் குறித்து மன்றாட வேண்டும் என்பதை வெளிப்படுத்தும்படி தேவனிடம் கேட்டு ஜெபத்தில் காத்திருக்க வேண்டும். நோக்கமற்றதும் ஒழுங்கீன மானதுமான ஜெபங்கள் கூடாது. கிருபாசனத்தின் முன்பாக வரும்போது புத்தியோடு என்ன தேவை என்று அறிந்து ஜெபிப்பதற்கு ஆவியானவரின் ஒத்தாசை தேவை. தூய ஆவியானவரின் உந்துதல் உங்களிலிருப்பதை உணர்ந்து, அவைகளுக்காகவே ஜெபிக்க வேண்டும். நமது தேவைகளுக்காக முந்தி நிற்கக் கூடாது. நாம் விரும்பு கிறவைகளைவிட அவர் தரும் நன்மைகள் ஆசீர்வாதமானவை. ஆண்டவரே நாங்கள் ஜெபிக்க எங்களுக்குக் கற்றுத் தாரும். உமது எண்ணங்களை எங்கள் மனதிலும், உமது விருப்பங்களை எங்கள் இருதயங்களிலும் உமது வார்த்தைகளை எங்கள் உதடுகளிலும் உம் சித்தப்படி தருவீராக. இப்படி ஜெபிக்கும் ஜெபம் ஆவியில் ஜெபிப்பதாயிருக்கும்.

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!

எழுப்புதலுக்காக இதய கதறல்

(7 மணி நேர உபவாச ஜெபம்)

இடம் : **I.P.C. Bethany Prayer House**
27/6A, Paruthivillai, Martandam, K.K. Dist. Mobile : 94882 74557

நாள் : ***03.12.2022,*** *1-வது சனிக்கிழமை*

நேரம் : *காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை*

செய்தி : *சகோதரன்* **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** *குஜராத்*
IEM மிஷனெரிகள், *தமிழ்நாடு*

தொடர்பு : **வருகையின் தூதன்** *மொபைல் : 9543221008*

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

தேவ பணிகளெல்லாம் **ஜெபத்**தின் மூலமாகவே செய்யப்படுகின்றன. அவர் சிங்காசனத்திலிருந்துகொண்டு வேண்டுதல் செய்கிறார். நமக்காவும் வேண்டுதல் செய்கிறார்.

ஆவிக்குரிய வாழ்வில் இன்றியமையாதது **ஜெபம்**. ஆயினும் எப்படி ஜெபிக்க வேண்டும், எதற்காக ஜெபிக்க வேண்டும் என்று நாம் அறியாதிருக்கிறோம். நமக்காக ஆவியானவர் வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு ஜெபிப்பதாகப் பவுல் ரோமருக்கு எழுதுகிறார்.

நாம் **ஜெப**த்தை ஊழியமாகவும், தேவ **வசன**த்தை அதற்கு ஆதாரமாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இயேசுவின் மிகப்பெரிய இரகசியம் அவருடைய **ஜெபம்** என சீஷர்கள் கண்டு கொண்டனர். தனது சீஷர்களும் தம்மைப் போலவே ஜெபிக்க வேண்டுமென்ற ஆசை அவரிடமிருந்தது என்பதை அவர்கள் அறிந்தனர்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason